செ.வெ.எண்:37/மே நாள்:20.05.2016

**இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதி மொழியினை அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக் கொண்டனர்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதி மொழியினை அனைத்து துறை அரசு அலுவலர்களும் இன்று (20.05.2016) ஏற்றுக் கொண்டனர். முன்னதாக 2 நிமிடம் மௌன அஞ்சலி கடைப்பிடிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**<u>கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி</u>**

அகிம்சை, சகிப்புத்தன்மை ஆகிய நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கையுடைய இந்திய மக்களாகிய நாம், எவ்வகையான கொடுஞ்செயல்களையும், வன்முறைகளையும் முழு ஆற்றலோடு எதிப்போம் என உறுதி கூறுகிறோம். எல்லா மக்களிடத்தும், அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிர்களுக்கும் மற்றும் நற்பண்புகளுக்கும் ஊறுவிளைவிக்கும் பிரிவினை சக்திகளை எதிர்த்துப் போராடவும் நாம் உறுதி கூறுகிறோம் என்று கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழியினை அனைத்து துறை அரசு அலுவலர்களும் உளமார ஏற்றுக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**